
# 7. எஸ்தோனியா

*இ.ஜே.சுந்தர்*










**சோ**வியத் ஒன்றியம் 15 துண்டுகளாகச் சிதறியபோது, அதில் ஒன்றாக விடுதலை பெற்ற வட கிழக்கு ஐரோப்பிய நாடுதான் எஸ்தோனியா. அண்மைக்காலத்தில் பெரும் பாய்ச்சலுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் போட்டி போட்டு எல்லாத்துறைகளிலும் வளர்ந்து வரும் ' பால்டிக் புலி' என்று விமர்சிக்கப்படும் புதுப்பணக்கார பூமி! பால்டிக் கடலோரம் உள்ள நாடுகளின் ஒன்றிணைப்பு, ஐரோப்பிய யூனியன், நேட்டோ அமைப்பு, ஐநா சபை குழு முதலியவற்றில் உறுப்பினராகத் தன்னை வலுப்படுத்திக்கொண்ட நாடு.

எஸ்தோனியா பற்றி பலரும் அறியாவிட்டாலும், அது ஆற்றிவரும் சாதனைகளால் தன் மேல் ஒளிவெள்ளம் பாய்ச்சி வருகிறது. உலகில் முதல் நாடாகத் தேர்தலில் இணையம் வழி வாக்களிப்பதைச் சோதனை செய்து சாத்தியமாக்கிய நாடு இது. 2015

தேர்தலில் இதன் குடிமக்களில் 1,76,491 பேர் வீட்டில் இருந்தபடி பிரச்சினையின்றி வாக்களித்துள்ளனர். இதனால் அங்கு ஏராளனமான தேர்தல் செலவையும், நேரத்தையும் எஸ்தோனியா அரசு மிச்சப்படுத்தியுள்ளது.

இந்நாடு ஹாலந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை விட அளவில் பெரியது. நம் ஹரியானா மாநில அளவு உள்ள(45,339 ச.கி.மீ) இந்த தேசத்தில் வாழும் மக்கள் வெறும் 13 இலட்சம் பேர்கள் மட்டுமே.. இரண்டாம் உலகப்போரில் அன்றிருந்த 25% மக்கள் கொல்லப்பட்டனர் என்பதும் இதற்குக் காரணம். ஆண்களின் எண்ணிக்கை 46% தான்.. சராசரி ஆயுள் ஆண்களுக்கு 65வயது மட்டுமே ஆகும். ஐரோப்பாவின் மக்கள் தொகை குறைவாக உள்ள நாடுகளில் இதுவும் ஒன்று. இதன் எல்லைகளாக, மேற்கே பால்டிக் கடலும், பால்டிக் கடலுக்கு அப்பால் வடக்கிலும், மேற்கிலும் முறையே பின்லாந்தும், சுவீடனும் அமைந்துள்ளன. இதன் தெற்கே லத்வியாவும், கிழக்கே பெய்பஸ் ஏரியும் இரஷ்யாவும் உள்ளன. எஸ்டுகள் என்ற இனத்தவர் முதல் நூற்றாண்டில் இங்குக் குடியேறியதால் இந்நாடும் எஸ்தோனியா எனப் பெயர்பெற்றது. ஆட்சிமொழி, கல்விமொழி எல்லாம் எஸ்தோனியன் மொழியே. 67.3% மக்கள் எஸ்தோனியர்; 29.7% மக்கள் இரஷ்யர். 3% மக்கள் பிறமொழியினர். எஸ்தோனியன் மொழி பின்னிஷ் மொழியுடன் தொடர்புடையது. ஐரோப்பாவில் மிகுதியாகப் பேசப்படும் இந்தோ ஐராப்பிய மொழிகளுடன் இம்மொழிக்குத் தொடர்பில்லை. குடிமக்களில் 16% பேருக்கே மத நம்பிக்கை உள்ளது. மத நம்பிக்கை உடையோரில் பெரும்பாலோர் கிறித்துவர்கள். பெரும்பாலான மக்கள் எந்த மதத்திலும் நம்பிக்கையற்றவர்கள். உலகில் மத நம்பிக்கை குறைவான நாடுகளில் இதுவும் ஒன்று..



***50%காடுகள்***

11,000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு மனிதர்கள் **வாழ்ந்துள்ள**னர். கடந்த காலங்களில் டென்மார்க்கிற்கும், ஸ்வீடனுக்கும் அடிமைப்பட்டிருந்த எஸ்தோனியா, 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரஷ்யப் பேரரசின் ஆளுகைக்கு வந்தது. 1917 ஆம் ஆண்டு இரஷ்யப் புரட்சி நடந்தது. அதன் பின்னர் இரஷ்யாவை ஜெர்மனி வெற்றி கொண்ட நிலையில் எஸ்தோனியாவின் மூத்த குடிமக்கள் எஸ்தோனியா சுதந்திரப் பிரகடனத்தை 1918 ஆம் ஆண்டு பெப்ருவரி 24 ஆம் நாள் வெளியிட்டனர். சுதந்திரத்துக்கான போரை 2 ஆண்டுகாலம் எஸ்தோனியா நடத்தியது. 1920 ஆம் ஆண்டு இரஷ்யாவுக்கு எதிரான சுதந்திரத்துக்கான எஸ்தோனியாவின் யுத்தம் வெற்றியடைந்தாலும், அச்சுதந்திரம் நீடிக்கவில்லை. 1940 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தால் மீண்டும் எஸ்தோனியா ஆக்கிரமிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் உடைந்து நொறுங்கிய போது தனது சுதந்திரக் காற்றை எஸ்தோனியா சுவாசித்தது..



*1918- சுதந்திரப்பிரகடனம்*

எனவே.. 24.02.1918 இல் இரஷ்யாவிடமிருந்து விடுதலை பெற்றதற்காகவும், பின் 20.08.1991 இல் சோவித் ஒன்றியத்திலிருந்து விடுதலைப்பெற்றதற்காகவும், இந்நாட்டில் இரு சுதந்திர தினங்களைக் கொண்டாடுகிறார்கள். இரண்டாவது சுதந்திர தினம் மீட்கப்பட்ட சுதந்திர தினம் என அழைக்கப்படுகிறது.



*எஸ்தோனியா நாடாளுமன்றம்*

விடுதலைக்குப்பின் இந்நாடு ஜனநாயக நாடாளுமன்ற குடியரசானது. ஐரோப்பியி நாடுகளிலேயே அதிக நாள்கள் பிரதமராக இருந்த ஆண்டுரூஸ் அன்சிப் (2005-14) அவர்களின் ஆட்சி முடிந்து இன்று 36 வயது இளைஞரான டாவி ரோய்வாஸ் பிரதமராக உள்ளார்.



*36 வயது பிரதமர் டாவி ரோய்வாஸ்*

நாடு 15 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. 2222 தீவுகளும், 1400 ஏரிகளும், 200 நதிகளும் மொத்த பரப்பில் உள்ள 50% காடுகளும் இதன் மனதைக்கொள்ளையிடும் இயற்கைச்செல்வங்களாகும். 33 நகரங்களைக்கொண்ட இந்நாட்டில், 70% மக்கள் நகரங்களில்தான் வாழ்கிறார்கள்.


*பழமை மாறா டலின் நகர்*

இதன் தலைநகரமும், நாட்டின் பெரிய நகரமும் **டலின்**(Tallinn) ஆகும். ஆனால் ஆண்டு முழுவதும் சூழலுக்கேற்ப தலைநகர் மாறும். டார்டு(Tartu) கலாச்சார தலைநகராகும். பார்னு(Parnu) கோடைத்தலைநகராகும். 4,04,500 மக்கள் வாழும் தலைநகர் டலின் பழையனவும் புதியனவும் கலந்துகாணப்படும் அருமையான சுற்றுலா நகரமாகும். ஐரோப்பாவின் பல நகரங்களில் மத்திய கால கட்டடங்கள் மறைந்து விட்ட நிலையில் இங்கு இத்தகைய கட்டடங்களும், ஆலயங்களும் உயிர்ப்புடன் பாதுகாக்கப்பட்டு, உலக மரபுச்சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. 21 கோபுரங்கள் நகர மதிலையொட்டி இன்னும் காணப்படுகின்றன.



*டலின் வணிக மையம்*

பழையன கழியாமல், அங்கு புதியனவும் புகுந்துள்ளன. இந்நகர மக்களில் 98% பேர்கள் வங்கிச் செயல்பாடுகளை ஆற்றுவது இணையத்தின் வழியே; 91% பேர்கள் வரிகளைச் செலுத்துவதும் இணையத்தின் வழிதான். இந்நகரில் 14 துறைமுகங்களும், இந்நகருக்கு உலகில் 26 சகோதரி நகரங்களும் உள்ளன. 13,000 கைப்பேசிகளைப் பயன்படுத்தி நகரமையத்தில் அமைக்கப்பட்ட இருக்கைகள் வியப்புக்குரியன.



*இலட்சம்பேர் கலந்துகொள்ளும் நடன இசை நிகழ்ச்சி.*

இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் நடனப்பாட்டுத் திருவிழாவில் இலட்சம் இளைஞர்கள் கலந்துகொண்டு மகிழ்வதும், மகிழ்விப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கி.பி 1441 இல் திருமணமாக இளைஞர்கள் நகரமன்றத் திடலில் ஒன்றுகூடி உலகிலேயே முதல் முறையாக கிறிஸ்மஸ் மரத்தை அறிமுகப்படுத்தியதும் இந்நகரில்தான்.

இந்நகரத்தின் மேயர் ஒரு புரட்சிகரமான அறிவிப்பை அண்மையில் வெளியிட்டார். இந்நகரத்தில் குடியிருப்பவர்களாகப் பதிவு செய்வோர் அனைவருக்கும் நகரில் அத்தனைப் பொது போக்குவரத்தும் இலவசம் என்பதே அந்த அறிவிப்பு. இதனால் நிறைய பேர்கள் இந்நகரினராகத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள, நகரின் வரிவருவாய் பெருகியது. கடைகளில் வணிகம் செழித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக சாலைகளில் கார்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து, சுற்றுச்சூழல் மாசற்றதானது.

எஸ்தோனியாவின் வளர்ச்சிக்கு மக்களின் கல்வியறிவும், தொழில்நுட்ப வளர்ச்சியும் முக்கிய காரணங்களாகும். 1850 ஆம் ஆண்டிலேயே எஸ்தோனியர்கள் 80% எழுத்தறிவுடையோராய் இருந்தனர். இன்று 99.8% எழுத்தறிவுடையோராய் உலகில்

இரண்டாவது இடத்தில் உள்ளனர். வயது வந்தோரில் 89% பேர்கள் பள்ளியிறுதி வகுப்பு முடித்தவர்கள் ஆவர். சுவீடன் ஆட்சிகாலத்தில் 1632 லேயே கஸ்டாவுஸ் அடால்புஸ்-2 **என்பவரால் டார்டு பல்கலைக்கழகம்** உருவாக்கப்பட்டது.



*டார்டு பல்கலைக்கழகம்*

வடக்கு ஐரோப்பாவின் பழம்பெரும் பல்கலைக்கழகங்களில் இது ஒன்றாகும்.1919 லேயே எஸ்தோனியன் மொழியில் பல்கலைக்கழகப் பாடங்கள் நடத்தப்பட்டன. 18 முதல் 28 வயதிற்குள் இராணுவப்பயிற்சி அனைத்து ஆண்களுக்கும் கட்டாயம். 8 மாதம் முதல் 11மாதங்கள் வரை வெளியிடங்களுக்கும் சென்று பணியாற்றவேண்டியிருக்கும். எஸ்தோனிய இராணுவம் ஆப்கனிஸ்தான்,ஈராக், போஸ்னியா முதலிய நாடுகளுக்கும் சென்று ஒத்துழைப்பு நல்கியிருக்கிறது. மென்பொருள் தொடர்பான தாக்குதலைச் சமாளிக்க இ- மிலிட்டரி என்ற பிரிவும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 'ஸ்கைப்' வழி இணையத்தில் பார்த்துப்பேசுவதை உலகிற்கு அறிமுகப்படுத்தியது இந்நாடே. ஹாட்மெயில் என்ற மின்னஞ்சலும் இங்கு உருவானதே. உயர்தரமான கல்வி வழங்கும் இந்நாட்டில் எல்லாப் பள்ளிகளும் இணையத்தில் இணைந்துள்ளன. பார்க்குமிடமெங்கும் 'வைஃபை' என்ற கம்பியில்லா இணைய இணைப்பையும், மின் ஆளுமையையும் காணமுடியும். இங்கிலாந்தில் 1702 இல் தான் முதல் நாளிதழ் வெளிவந்தது. அதற்குமுன் 1675 லேயே எஸ்தோனியர்கள் நாளிதழை அறிமுகப்படுத்தினர். இதன் தொடர்ச்சியாக பத்திரிகை சுதந்திரத்தில் உலகிலேயே இந்நாடு 3வது இடம் வகிக்கிறது. தனி மனித சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் இவற்றிலும் முன்னணியில் உள்ளது. பொறியாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் உள்ளோரில் 51% பெண்களே. பெண்களுக்கு மகப்பேறு விடுமுறை 100% ஊதியத்துடன் 18 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. மக்களின் சராசரி மாத வருவாய் மார்ச் 2011 புள்ளிவிவரப்படி ரூ 62,000. வருமான வரி மொத்த வருவாயில் நேரடியாக 21% கணக்கிடப்படுகிறது(Flat tax). வேறு நெளிவு சுளிவுக்கு வழியில்லை. அரசின் ஆண்டு வரவு - செலவு(Budget) கணக்கீட்டில் எங்கும்

காணமுடியாதபடி  கையிருப்பு மிச்சமே உள்ளதாம். ஜனவரி 2011 முதல் இந்நாடும் யூரோ நாணயத்தை ஏற்றது. யூரோ பயன்படுத்தும் நாடுகளில் மிகக்குறைந்த கடன் உள்ள நாடும் இதுவே.



*மனைவியைச் சுமந்து ஓடும் கணவர்*

எதையும் புதுமையாகச் செய்வதில் ஆர்வமுடையவர்கள் எஸ்தோனியர்கள். மனைவியரைத் தோளில் அல்லது கழுத்தில் தலைகீழாக உப்புமூட்டை விளையாடுவதுபோல சுமந்தபடி ஓடும் வேடிக்கையான ஓட்டப்பந்தயம் இங்கு உருவாகி புகழ்பெற்றுள்ளது.



*கீகிங்  என்ற முழுச்சுற்று ஊஞ்சல்*

வழக்கமான ஊஞ்சலில் ஆடும்போது மேல்வரை சென்று பின் கீழே வருவதற்குப்பதிலாக முழுவதும் 360 டிகிரியில் முழு வட்டமாக சுழன்று ஆடும் ஒரு சாகச விளையாட்டு கீகிங் என்ற பெயரில் இங்கு அறிமுகமாகி மற்ற இடங்களிலும் பரவி வருகிறது. எஸ்தோனிய மண்சிகிச்சை புகழ்பெற்றது. இங்கு காணப்படும் வர்ஸ்கா என்ற மண்ணை உடலில் பூசி சிகிச்சை பெற்றால் பல நோய்கள் குணமாகிறதாம்.


*ஜூனிபர் பெர்ரி பழங்கள்*

இங்கு விளையும் ஜூனிபர் பெர்ரி(Juniper Berry) என்ற பழம் 99 வகை நோய்களை குணப்படுத்துவதோடு, இப்பழத்தின்மேல் சிலுவை அடையாளம் உள்ளதால் அது பேய்களை, சூன்யத்தை விரட்டுவதாகவும் நம்பப்படுகிறது.

இதுவரை  அறிந்த வரலாற்றில் மக்கள் வாழ்ந்த இடத்தில் விழுந்த மிகப்பெரிய எரிகல் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இங்குள்ள சாரிமா தீவில் விழுந்ததாகும். இது ஒரு நியூகிளியர் குண்டு போடப்பட்டதற்கு இணையாகும். உலகில் மிகுதியான விண்கற்கள் விழுந்த நாடும் இதுவே..

வடதுருவத்திற்கு அருகே உள்ள இந்நாட்டில் சராசரி வெப்பநிலை 5.2 டிகிரி செல்சியஸ். கோடையில் இரவு முழுவதும் நல்ல வெயில் அடிக்கும். குளிர்காலத்தில் நாள்முழுவதும் இருட்டாக இருக்கும். எனவே சைக்கிளில் செல்வோரும், நடந்துசெல்வோரும் 'ரிப்ளக்டர்' பொருத்திக்கொண்டு செல்வது கட்டாயம். மக்களின் பொதுவான உணவு கறுப்பு ரொட்டி, பன்றி இறைச்சி, உருளைக்கிழங்கு, பால்பொருள்கள் முதலியன. கோடைகாலத்தில் பெர்ரி வகை பழங்கள், மூலிகைகள், காய்கறிகள் இவற்றைத் தோட்டத்திலிருந்து அப்பொழுதே பறித்து உண்பதையே பலரும் விரும்புகின்றனர்.


*நகர மக்கள்*

திரைப்படத்துறையையும் எஸ்தோனியர்கள் விட்டுவைக்கவில்லை. சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் அண்மையில் (06-01-2016) கேசினோ திரையரங்கில் திரையிடப்பட்ட '1944' என்ற எஸ்தோனியத் திரைப்படத்தைப் பார்த்தவர்கள் இரண்டாம் உலகப் போரைப் பற்றி எடுக்கப்பட்ட ஆயிரக் கணக்கான திரைப்படங்களின் வரிசையில் மேலும் ஒரு தரமான படம் என்றனர். வரலாற்றின் விசித்திரப் போக்கில் சிக்கிக்கொண்ட எஸ்தோனியர்கள் இரஷ்யா, ஜெர்மனி சார்பாக இரு அணிகளில் தமக்குள்ளேயே போரிட்ட அவலத்தை இப்படம் சொல்கிறது. துப்பாக்கி, பீரங்கி, குண்டு போன்றவற்றுக்கெல்லாம் நாடு, இனம், மொழி, அன்பு, நட்பு, கருணை, புத்தி என்று ஏதும் கிடையாது என்ற உண்மையை முகத்தில அடிப்பதுபோல இதன் இயக்குநர். அமோ ங்கானன் (Elmo Nüganen) சித்திரித்துள்ளார். வெளிநாட்டுத் திரைப்பிரிவில் இப்படம் ஆஸ்கர் விருதைப்பெறும் வாய்ப்புள்ளது.


*இந்திய எஸ்தோனியா வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு*

2015 செப்டம்பர் மாதம், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுராஜ் அவர்களும் எஸ்தோனிய வெளியுறவுத்துறை அமைச்சர் மரினா கல்ஜுரண்டு அவர்களும் இருநாட்டு விவகாரங்கள் தொடர்பாக 70வது ஐநா பொதுசபையில் சந்தித்துப் பேசியுள்ளனர். ஏறத்தாழ 235 இந்தியர்களும், 500 ஈழத்தமிழர்களும் அங்கு வாழ்கின்றனர். இந்தியாவின் எஸ்தோனியத் தூதரகம் பின்லாந்தின் எல்சிங்கி நகரிலும், எஸ்தோனியாவின் இந்தியத்தூதரகம் புதுடில்லியிலும் உள்ளன.


*புது டில்லி எஸ்தோனியா இந்திய தூதரகம்*

சென்னையிலிலிருந்து டில்லி வழியாக பின்லாந்து தலைநகர் எல்சிங்கிக்கு நேரடி விமானம் உள்ளது. அங்கிருந்து 82 கி.மீ தொலைவிலுள்ள எஸ்தோனியத் தலைநகர் டலினுக்கு இணைப்பு விமானத்தில் செல்லலாம். கட்டணம் ஏறத்தாழ ரூ42,000. எல்சிங்கிக்கும் தலினுக்கும் இடையில் ஆழ்கடலுக்குள் அமையவிருக்கும் சுரங்கப்பாதை உலகிலேயே நீளமானதாகச் சாதனை படைக்கவுள்ளது.

*(வெற்றி வேந்தன்:பிப்ரவரி2016)*